# நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் வழக்கு விதிகள் கோவையின் 108வது அத்தியாயத்தின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெற்றிடமாகவுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிகளுக்கு நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடங்களின் அட்டவணை மற்றும் விண்ணப்பப் படிவங்களை www.moj.gov.lk எனும் அமைச்சின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இந்தப் பதவி அரச சம்பளம் பெறும் நிரந்தர பதவியல்ல என்பதுடன் ஒரு கௌரவப் பதவியாகும். மரண விசாரணை அதிகாரிகள் தமது மரண விசாரணையை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் அனுமதிக்கப்பட்ட பயணச் செலவு/இணைந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

பின்வரும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் அமைச்சின் இணைய தளத்தின் ஊடாக குறித்த நிகழ்நிலை (online) விண்ணப்பப் படிவம் அல்லது வன் பிரதியை முறையாகப் பூர்த்தி செய்து 2026-02-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

i. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

ii. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையராகவும் இருக்க வேண்டும்.

iii. நியமனத்தை எதிர்பார்க்கும் திடீர் மரண விசாரணை அதிகாரப் பிரதேசத்திற்குரிய கிராமசேவையாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

iv. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 27 வயதிற்குக் குறையாமலும் 65 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

v. க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கில பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல். (ஆங்கில மொழி அறிவு, தொழில்நுட்ப அறிவு மற்றும் க.பொ.த. உயர் தரத்தில் 03 உயிரியல் பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

vi. கடமையை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

vii. மோட்டார் வாகனச் சட்டத்தின் (காலத்திற்குக் காலம் வேறுபடக்கூடிய வகையில்) 10,000.00 ரூபாவிற்கு மேற்படாத அபராதம் விதிக்கக்கூடிய குற்றம் தவிர வேறு எந்தவிதமான குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படாமலிருத்தல்.

viii. நீதிமன்ற விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட எந்தவிதமான பதவியையும் வகிக்காதவராகவிருத்தல்.

ix. 1951ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளராக சேவையாற்றாமலிருத்தல்.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் அரசாங்க, மாகாண சபை நிதியத்தில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிதியத்திலிருந்து சம்பளம் அல்லது கொடுப்பனவைப் பெறும் நபர்கள், அரச கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் தோழர்கள், தனியார் துறையில் நிரந்தர சம்பளம் பெறுபவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவர்கள்.

குறைபாடுகளுடனான விண்ணப்பப் படிவம் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

**2026 ஜனவரி மாதம் 9ஆம் திகதி,**
**கொழும்பு 10,**
**நீதி அமைச்சில்.**

**ஜனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன,**
**செயலாளர்,**
**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு**

tamilguru.lk